அம்மன் துணை

# திருவொற்றியூர்
# வடிவாம்பிகை
# கட்டளைக் கலித்துறை
## யந்தாதி



இயற்றியவர் :

ஸ்ரீலஸ்ரீ சாது நாராயண தேசிகர் மாணவர்

புலவர்: கி. அ. முனுசாமி பிள்ளை
32, பிடாரியார் கோயில் தெரு,
சென்னை-1.

விலை 0-20

O;12mv91,T
N80
164410

1980

உ

# திருவொற்றியூர்
# வடிவுடையம்மை
# கட்டளைக் கலித்துறை
## யந்தாதி



### வினாயகர் துதி

திருநிரை யொற்றி வடிவுடை யம்மை திருவடிக்கே
நருந்தமிழ் நன்மலர் கட்டளை யந்தாதி நான்தொடுத்து
பெரு மகிழ்வோடு புனைந்தணி நூறும் பிரியமுடன்
வருமத யானை மலர்கழல் வாழ்த்தி வணங்குவனே

### முருகன் துதி

தேவாதி தேவன் திருமால் மருகன் திருவடியை
பாவால் வழித்தி தினமுந் தொழுதிடு பக்தருக்கு
ஆவாத காரியம் வொன்றுமே யில்லை யகிலமதில்
பாவாண ராகிப் பழந்தமிழ் மூன்றும் பயிற்றுவரே

164410



மான்போல் விழியாள் மதிமா முகத்தாள் வடிவுடையாள்
தேன்போ லினிக்கும் மொழியா ளொற்றி தியாகர்துணைவி
ஊன்னின் னொளிரு முண்மையாள் படைத்தா லுலகனைத்தும்
தான் என்றுங் கன்னி யுருவந் தரித்த தயாபரியே 1

தயாபரி தாரணி யெங்கும் வடிவுடைத் தாய்தழைத்தாள்
நயாகுண சோதி நலஞ்சேர் பழமறை நாற்பொருளே
கயாரி யிவருங் கருணைக் கடலென்முக் கண்ணுடையாள்
சுயாம்பவி மாசி வுயரொற்றி யூர்வாழ் சுமங்கலியே 2

சுமங்கல மாகு முலகிற் சுகந்த சோதிஸ்சொருபி
நமன்கல மாகா தருள்தரத் தோன்றுநம் நாரணியே
தமமணு காதெனுள் சத்குண சாந்தநற் சாம்பவியே
இமந்தரு தேவி இரையிடம் வாழும் எழில்மணியே 3

மணிமந் திரமும் மருந்துந் திருவருள் மாதுமையாள்
அணியா பரணமு மாருயிர் கூனும் அவனியெல்லாம்
தணிவா யளிக்குந் தயவுடைத் தாயை தவமுடையோர்
பணிவார் பிணிகள் பறிக்குநல் லொற்றிப் படரமுதே 4

அமுதே யரனு ரிடம்பெறு மாதி யருள்உமையே
இமவான் மகளே எழிலுல கெல்லா மியக்குவளே
நமனு ரென்முன மணுகா தருள்தர நாடிடுவாய்
குமர நற்றாயை வடிவுடை மாரியைக் கோரினனே 5

கோரித் தொழுவார் குணமே பெருவார் குவலயத்தில்
சீரைத் தருதிரு நீரை தருவாய் சிவனிடத்தே
சேரத் துணைபுரி செல்வி யருளுஞ் செகதம்மையே
பேரணித் தாயருளொற்றி பெருமான் பெருந் துணையே 6

துணையா யிருந்து உலகு தனைதினந் தோற்றுவித்தே
புணையாம் வினைதனை காட்டி யுடலிடம் போதமதாய்
அணையார் புரமூன் றெரித்து அழித்து அருகிருந்தே
நினையாறை நீற்று புகழொற்றி நிற்க நினைந்தனையே 7

O-,12 MU91,T
N80

நினைவார் நினைவில் நிலைத்து விளங்கும் நிரந்தரமாய்
மனையான் மகவும் மருவிடும் செல்வமும் வாழ்நலமும்
எனையாண் டெனதுள் ளிருந்திடர் தீர்ப்பாளிரை மருவி
தனைவந் தடைவார் துயரொழித் தொற்றியூர் தங்குவளே 8

தங்குவ ளெங்குந் தனைபணிந் தோரை தரணியிலே
மங்கள முண்டாம் படியருள் தேவி மதிமுகத்தாய்
எங்கள் குறைதீர் இரைவி இமவதி ஈஸ்வரியை
தங்குந் திருவொற்றி யூர்வாழ் தயவாந் தனிப்பொருளே 9

பொருளாய் புவிவா ழுயிரா யணுவாய் பொலிந்திலகும்
அருளா யொளியா யவனிக் கமுதா யறம்பகர்வாய்
தெருளாய் யுணர்வாய் திகிழு நங் கன்னித் திருப்புகழே
மருளா மனத்தின் மயக்கத் திருப்பது மாதுமையே 10

உமையே வுனக்கு மகனா மெனகுள் உயிர்துணையே
இமையோர் வணங்கு மெழி வொற்றியூர் வாழிருநிதியே
தமையன் திருமால் மருகன் பிறமன் தருமுருகன்
அமையும் வினாயகன் வீரன வனியர்க் கன்னையுமே 11

அன்னை யுலகில் அரனார் மனைவி அதிதுணையாம்
தன்னை படைதா ரிலைதன் னுருவம் சகமயக்கே
பொன்னை மணியை யுலகப் பொருளினை பூத்தளித்தாய்
என்னை யுனது இணைதாள் பணிய வியற்றினையே 12

இயன்ற தறஞ்செய் என நல் லரினா ரியம்பினரே
இயக்குஞ் சிவமுண் டெனனின் றெதிலும் மெலாயிடத்தும்
நயக்குநந் தேவி நலஞ்சேர் வடிவியை நாடிநன்றாய்
மயக்கம தின்றி வளருவை நித்தம் மகிழ்வுடனே 13

மமிழ்வுட னென்றும் வளம்பெற வேண்டின் மனமடக்கம்
இகழ்ந்திடார் யாருமியன்ற தளித்திவ் விருநிலத்தே [வும்
புகழ்வுடன் வாழ்வோர் பொருந்திடுஞ் சாந்தமு பொன்னென
நிகழ்தவச் சாலை யொற்றியூ ரன்னையை நினைமனமே 14

நினைவா ருனையே னினைவி லென்றும் நிலைதவத்தோர்
மனவா தனைதீர்த் தவரை யறிவாய் மகிழவைக்கும்
இனமா தவத்தோர் தவஞ்செயுஞ் சாலை யிடமளிப்பாய்
கனமா தவியே கரும்பே யொற்றியூர் கண்ணின் மணியே 15

கண்ணின் னொளிருங்கன்னியேயுனையான் கைகுவிக்கின்றேன்
மண்ணின் னுலவு முயிர்களை காக்க மனந்தளராய்
எண்ணரி லுயிரை மீன்றவள் நீயே எவையுமுனையே
தண்ணியென் றொற்றி வடிவுடைத் தாயே தருகுவயே 16

தருவதர்க் குன்னை யலதிலை தாயே தந்தருள் நீயே
உருகுவா ருன்னை யன்றொருவ ருண்டோ வுலகத்திலே
பெருகுபே ரின்பம் பிரங்குமா காளியே பெற்றவள் நீ
சிறுவனே னுன்னை யொற்றியிர் கண்டேன் செம்மலர் திருவே

திருவடித் தந்துஎன் தீவினை தீர்பாய் திகழிரைவன்
இருவடிப் பற்றித் தவம்புரிந் தீன்றா யிருநிலத்துங்
கருவுருக் கொள்ளாச் சிறியவ ளாகுங் கௌரியெனம்மை
பெருகொற்றி யூர்வாழ் வடிவுடை பெண்ணாள் பெருந்திருவே

திருவே எனது துணையே யுணர்வின் தெளிவறிவே
அருளே யருளுமை யாமுயிர் செல்வமே மறிவென்றோர்
பொருளு மதுவல தில்லை யுனது புவிதனிலே
குருநெறி யுன்னி யுறுநெறி நாடிடக் கூறுவரே 19

கூறுவர் நல்லோர் துடியிடை கோதை கொடியிடையாள்
நீறுவந் தென்றுதன் நெற்றியிற் பூசுவர் நீநிலத்தில்
சோறுணு முன்னுந் திருவைந் தெழுத்தையே சொல்லுவரே
தேறுவர் தாய்தாள் திடமெனக் கண்டு தெளிவினிலே 20

தெளிவருள் தாயே தினமுந் தொழுவேன் திருவடியை
ஒளிபெறு மாயை யுனதுரு சாயை ஓங்காரிசத்தி
களிதரு காளிநீ கைலையின் வாசகிக் காரிகையாம்
வெளியுரு வீசன் விருப்புறு தேவி விழுப்பொருளே 21

விழுப்பொருள் பார்வதி சத்திச் சொரூபி வீரவிமலி
முழுமதி மூஞ்சுள கௌரிகல் யாணி முருகநற்றாய்
உழுவ ருணவா முதகம் உனைவிட் டுலகமுண்டோ
கொழுனன் தியாகீசனை யென்றும் நீங்காக் குடியிருந்தே 22

குடியிடங் கொண்டிடு மாரியை கைலைவாழ் குன்றுடையான்
அடிநடு வற்ற முதல் வனதிகுணன் அம்பலத்தே
தொடியணிந் தாளொடு மன்றில் நடமாடித் தூக்கிக்காலை
கொடியிடை வெற்றி வடிவுடை கோமகன்கோதைமுன்னே

கோதையென் றோர்முனிக் கூறிட் டொதிக்கினன் கும்பிடாது
வேதைகொண் டவனூண் விட்டிடக் கட்டளை விட்டிருந்தாள்
சாதகன் அத்திவடி வாகிக் கால்தரச் சாந்தியுற்றான்
பாதமலர் வேண்டினன் வெற்றிவாழ் சத்திப் பார்வடிவே 24

பார்வடி வத்தாய் பரவடி வத்தில் பதிந்துநின்றாள்
கார்வடி வத்தில் கணவரை என்றுங் கலந்திருந்து
ஊர்வடி வத்தில் உலகை படைத்தநீ வொப்பிலாது
தார்வடி வத்தில்நீ வெற்றிவா ழன்னை தனிநின்றாயே 25

தனிப் பொருளாகுஞ் சிவனை யிறுகத் தவமியற்றி
கனிமொழி மாதினை கண்ணுத லீசன் கலந்துடலாய்
மனிதருந் தேவர் விலங்கூர் பறவை மாநரர் நீர்
பனிமதி ஞாயர் நிலநீர் எரிகால் படர்வெளியே 26

வெளியுரு வாய விமலனைக் காண விரிஞ்னரியும்
தெளிவில ராகி யமர்புரிந் தோர்முன் திகழ்ந்தழலாய்
ஒளிதருஞ் சோதி யுருவெனத் தோன்றி யுமையவட்க்கே
களிதரு முத்திக் கறைமிடற் றண்ணலைக் கண்டனளே 27

கண்டன ரென்றும் அரனறி வென்றுக் கருத்தினிலே
எண்டிசை யீச நுருவிடம் வாழு எழிலுமையாள்
தண்டை யணிமணி முத்துடன் மோதிரம் தானணிந்து
தொண்டர் துய்ரை தவிர்குனல் வெற்றியூர் தோன்றினளே

தோன்றின வெல்லாந் துலங்கு முலகில் துணையெனவும்
ஈன்றன என்னை இலகுயிர் தன்னையே ஏத்தினர்கு
தான்துணை யாகி தனதாள் பணிவார் தவிப்பகல
மான்விழித் தாயை திருவொற்றியூரில் வணங்குவனே 29

வணங்குவன் தாய்மலர் தாளை வழிவழி வம்சமெல்லாம்
மணங்கமழ் மாமலர் வாவி வளனகர் மன்னிநின்று
இணங்குந் தியாக ரிடவா ழிறைவியை ஏத்திஎன்றும்
அணங்கு வடிவுடை யம்மை உன்றனடித் தொழுவனே 30

தொழுகுவ நான்தினம் துன்பமொழியத் தோகையின்
[முன்போய்
ஒழுகுவர் கண்ணீருங் கம்பலையாகி யுள்ளத் துருகி
மழுவாய் மனந்தளந் தொற்றி வடிவத்தை வாழ்த்திநின்று
எழுவார் சிரசின்மேல் கையெடுத் தேங்கி எனம்மை
[யென்றே 31

அம்மையே ஆதியே வொற்றியூ ரன்னையே ஆதரிப்பாய்
இம்மை மருமை யெங்கும் விளங்கி இலகிடுந்தாயே
செம்மையு ஞ்சேரச் சிறுமையும் நீங்கச் செகதலத்தே
எம்மையாள் தேவிநீ இரவிகா மாட்சி ஈஸ்வரியே 32

ஈஸ்வரி அம்பா சிவகாமி சத்தி இருந்தேனுள்ளே
ஆஸ்திக மென்னும் அறிவை விளக்கி யகமுணர்தி
வாஸதுவ வெளியிலே வாழ வைத்தாயுன் வாழ்த்திகூற
சாஸ்திரச் சோதியே வொற்றியூ ராதிச் சாந்தநிதியே 33

சாந்த நிதியே நிதிக்கெலா சத்தியஞ் சாந்தமுள்ளோர்
மாந்தரிர் மிக்கவர் சத்தியர் சாதன வாழ்வுகண்டோர்
நீந்தொணுப் பிறவித் துயரை நீந்தும் நிலையறிந்தோர்
காந்தனை கைவிடா வொற்றியூர் கன்னியை காணவருளே 34

அருளே வடிவா யுயிர்துணை யாகி அதிநலஞ்சேர்
இருளா யொளியா யிரவு பகலாய் எங்குமாய்நின்று
மருளா மனத்தின் மயக்கற் றொளிருநல் வாழ்வுநல்கும்
தெருளாகு மொற்றி யறிவாய் விளங்குந் திருவுமையே • 35

உமையா எனதூழ் வினையொழி விற்கு உளநினைந்து
அமையா தெவர்க்கு மறிவாய் விளங்கு அரனிடத்தே
சுமையா முலகச் சுழலை விலக்கிச் சொரூபமதில்
எமையாளு மொற்றி யிரைவனு மிரைவி ஏகமதே 36

ஏக னனேகனுய் எங்குமாய் நின்று வெல்லாவுயிர்க்கும்
ஆகமா யகமு மனந்த வடிவாய் ஆந்தனக்கு
போகமாய் போகப் பொருள்க ளவையும் பொலிந்திலங்கி
சோகந் தவிர்க்குந் திருவொற்றி யூர்வாழ் சுதந்தரியே 37

சுந்தரி சௌந்தரி எங்கனும் நிரைமால் சோதரியே
அந்தரி சாமளைப் பார்வதி ஆதிசத் தாந்திருவே
சந்திர சஞ்சரி மாரி மகிட சங்காரியம்பா
இந்திர ஞதி யிமையோர் வணங்கு மிணையடியே 38

இணையடிந்·தேடு மிருநில நல்லோர் இனத்திருந்தே
இணைந்திட நீங்கா இரைவிநங் கன்னி யீரடித்தன்னை
துணையெனப் பற்றித் தொழுதிடத் தோன்றுந் தூயவறிவே
கணைமழு சூல முமிலா தந்தகனை காய்ந்தனளே 39

காய்ந்தன சூரியன் வானில் யெரிந்து கருணைவெள்ளம்
பாய்ந்தன வெல்லாந் தழைத்தன வுயிர் பயிரெவையும்
சாய்ந்தன சாலி வயலில் மழைதாய் தனதடியை
ஆய்ந்தனன் ஞான திருவொற்றி யன்னை யரன்துணையே 40

துணையெனப் போற்று நந்தாய் திருத்தாளைத்துறவரத்தோர்
இணையிலாச் சோதியே யெழில்நிரை யாதி ஈஸ்வரியை
அணையார் புரங்கள் அழிய வெரித்தா அருள்சிவமாய்
மணையான கைலை மலைனின்ற வொற்றி வாழ்மாதவமே 41

வாழ்மயில் வாகனன் வாரண முகத்தோன் வாழுமுயிர்
தாழ்விலா தீன்றத் தயாபரித் தாயேநீ தாரணியில்
ஏழ்புவி பாதள மீதளம் படைத்து என்னையன்னை
தாழ்ந்து துதித்திட வொற்றியூரில் வந்து தங்கினையே 42

தங்கநற் றுவடம் மங்கலம் நேர்ரவி தன்கழுத்தில்
திங்களௌன் காந்தி முகச்சிவ காமி திருவுருவம்
எங்களை யீன்றதாய் யின்னலை தீர்க்குந்தா யெவ்வுயிர்க்கும்
சங்கடம் போக்குந் தாயிவள் வொற்றிவாழ் சத்தியுமையே 43

உமைக்கொரு பாகன் யுறைதிரு வொற்றியு வந்துனின்று
நமக்கிவர் தந்தை நடன புரீசனுர் நாம்வணங்கும்
இமவா னளித்த இரவி வடிவ இருநிதியாள்
நமதுயர் நீங்கத் தொழுவோந் தினமும் நலம்பெறவே 44

நலந்தருந் துன்பாயின வெல்லாம் நீங்கிடும் நமவென்றே
சொலவருள் சுந்தரி சத்தி யுமைமாலின் சோதரியே
பலமுறை யோதி மனப்பற்ற கலனம் பார்வதியை
குலமுறை நாடித் தொழுவோம் வடிவுடை கோமகளே 45

மகனு மகளு மறுவி யுருமாறி மாநிலத்தே
சகலமு மாறுவ துண்டா மனத்துஞ் சரவசர
புகவருஞ் சோதி யுருவோ டருவா புணருகின்ற
நிகரருந் தாயை வொற்றியூ ரன்னையை நினைமனமே 46

நினையு நினைவிற் கணுகா வறிவாய் நிலைத்திலகும்
தனைவிட் டகலாத் தருமத் திருவை தனதிடஞ்சேர்
மனைவி மகவு மருமகள் தன்னை வணங்கடியார்
கணஞ்சூழ் கைலைவாச மொற்றியூரிற் காணுங் கன்னி
[கையே 47

கன்னி யுலகீரேழு மளித்து வாசங் கைலைதன்னில்
மன்னுந் தியாகப் பெருமா னிடஞ்சேர் வடிவழகை
முன்னென் றறியான் முதல்வன் முதியோன் முதியவனை
பொன்னம் பலத்தே நடிக்க நடித்தநற் புண்ணியமே 48

புண்ணிய முன்ற னடிதனை யோதுவார் பூதலத்தில்
கண்ணிய ராகிக் கருதிய வெல்லாங் கைகூடிடுமே
தண்ணிய பார்வை தயவு தாட்சண்யம் சகலமுமே
மண்ணினி லொற்றியூர் வாழுவோர் தாயை வணங்கிடவே 49

வணங்கிடு வோரை வகையுடன் வாழ வழிவழியாய்
பணமுடி யீசன் படம்பக்க நாதன் பலவுயிர்க்கும்
உணவினை தந்து உருதுயர் தீர்த்து உதவியதாய்
அணங்கு வொற்றியூர் ஆரனிச் சடையனை யண்டினளே 50

அண்டினே னுன்னை யுதவுதந் தென்னை யருள்புரிவாய்
வண்டுசேர் கூந்தல் வடிவுடை வொப்பிலா மாதுமையை
பண்டு தியாகேசன் தேவீநீ பார்வதி பவானிதாய்
தொண்டரை காத்திட வொற்றியூர் வந்துநீ தோன்றினையே

தோன்றின வெல்லா வடிவினு னின்னுருத் தோற்றமேகாண்
ஊன்னின் ரெளிரு முயிருல கெல்லா முமைதிருவே
மான்விழி மாது மதுரைமீன் கண்ணி வடிவொற்றியூர்
தேன்மொழித் தேவி தியாகேசர் துணைவித் தேடினமே 52

தேடுவார் தம்மை தேடியே காணுஞ் சிவபெருமானை
ஆடிடுஞ் சிவத்துட னுடிய|மம்மை யம்பலத்தே
கூடுவார் கூட்டமே கூடிடுந் தேவிக் குலவதியை
நாடினேன் ருயே நளின மலரடி நான்றினமே 53

தினமுந் தொழுவார் சிவபெரு மானை திகழரனை
எனைபெரு தாயை யிரவி வடிவுடை ஈஸ்வரியை
முனமுப் புரத்தைத் தழலெழச் செய்தாள் முனிவர்தாமே
தனதன்னை என்வொற்றியூர் நின்று தங்கித் தவஞ்செய்வரே

தவஞ்செய் மடங்கள் தருமத் தலங்கள் தனித்தனியே
நவஞ்செய் தொழில்கள் நகர முழுதும் நனிவிளங்க
சிவந்தொழு மந்தணர் தேவா சிவாவென்ன சிந்திக்கவும்
நிவந்தெழுஞ் சோலை நிரையொற்றி தாய்தாள்
[நீவாழ்மனமே 55

வாழ்வளிக் குந்தாய் இமயக் குமரி வடிவுடையாள்
சூழ்வினை போக்கின சுத்த மெஞ்ஞானச் சுடவொளியில்
ஆழ்ந்திடச் செய்யு மமுத சிவமாய் யருளடியார்
தாழ்ந்து திருவொற்றி யூரில் நின்று தவம்புரிவரே 56

தவம்புரி சாலை திருவொற்றி யூரெனத் தங்குகின்றார்
பவம்தனை போக்கிடப் பற்றற் றிருக்கநம் பக்தரிடம்
சிவந்தனை யுள்ளச் சிவய நமவென சிந்தையினில்
உவந்துள் வெளியில் ஓம்சிவ சங்கரியென் றோதுவமே 57

ஓதுவ மென்றும் நம்தாய் திருத்தாளை ஓதுஞ்சிவத்தில்
மாதுமை ஐயுருவாக விளங்கி வாழ்வளிக்குந்தாய்
ஏதுவும் காரண காரிய மாகிய எங்குநின்று
மாதவ ரோதுநல் வொற்றியூர் வாழும் வடிவழகே 58

அழகே யுலகினில் தேடுவர் தேடி அதிநலஞ்சேர்
அழலே வடிவாய் விளங்கு மீசனை அனுதினமும்
நிழலே யுருவாய் நிலைசிவ காமியும் நின்றுதவம்
கழலே சதமென் கண்ணுத லீசனை கவர்ந்தனளே 59

கவர்ந்திடு மாயை கணிப்பரி தாகிய கன்னிகையை
உவந்தொரு சின்மய மாகிய சீவனில் ஊடுருவி
நவந்தரு காட்சி நலம்பல வாசி நனிவிளங்க
சிவமுமை யாகி யுமைசிவ மாகித் தெளிந்தனளே 60

தெளிதிடு ஞானத் திரமுடை யோர்சேர் திருவொற்றியூர்
ஒளிதிகழ் தியாகர் வுமைதன் பாகர் வுறைநகரில்
வழிசெலும் நல்லோர் அடிதுக ளடியேன் வன்பிணிதீர்
எளியனை யாளும் இறைவி வடிவுடை என்னம்மையே 61

அம்மையும் அப்பனு மாதியிற் தெய்வ அறுமறைசொல்
இம்மையி நன்மை இன்பமுந் துன்பமும் இயற்றுதவம்
செம்மையிற் சாந்தமுஞ் சேரச் சிறுமையும் சென்றிடுமே
நம்முன் னவர்சொல் வொற்றியூர் தவந்தனை நாடுவதே 62

நாடும் நகரமும் நாணில முழுதும் நஞ்சைபுஞ்சை
வீடுந் துரவு விளை நில மாடி விரிந்தொளிற
தேடுங் கடலை திருவொற்றி யூரை நாம் தேடுநின்றால்
மாடும் வளம்பெற வாழுநம் தாயை வணங்கிடவே 63

வணங்கிடு நன்றாய் தமிழ்தாய் தன்னையே வளம்பெருக
இணங்கு மடியவர் கூட்டமே நின்று இனம்பிரியா
மணங்கமழ் சோலை திருவொற் றிநகர் வணங்கடியார்
தணிந்தொளி நோக்காள் சதாசிவ நிடத்தே தங்குவளே 64

தங்குந் திருவொற்றி யூர்தவச் சாலையில் தன்னுணர்வால்
மங்கள கல்யாண குணசிவ மாம் மாதுவடிவில்
திங்களுங் கங்கை கரத்தை யணிவோன் திருவடியில்
எங்களை சேர்க்கும் மங்கள வடிவியை ஏண்ணவமே 65

எண்ணுவோர் தங்கள் அறிவினில் வாழு எழலுமையாள்
கண்ண நற் சோதரி கைலயான் மனைவி காரிகைக்கு
தண்ணளி வேலன் தந்திமுகத் தோன்றல் தனையரென்பார்
உண்ணின் றொளிரு வொற்றி வடிவுடை உமையவட்கே 66

உமையா ளுணவு மொளிசெய் பணியு முதலிடுவாள்
இமையோர் பணியும் பெருமான் அடியர்க் கிடமளிப்பார்
சுமையா முலகவ் வினைதனை போக்கிச் சுதந்தரமாய்
பணிமைதந் தேவி வொற்றிவாழ் வடிவுடை பார்வதியே 67

பார்வதி யென்கண் ணொளிதா உன்றன் பதம்பணிந்தேன்
சீர்பெருஞ் செல்வமும் மக்களும் வாழ்கை செகத்தினிலே
நேர்பெற நல்கும் நிலமு மிருக்கை நிலைத்திடவே
கார்தவழ் சோலையு மொற்றியூர் வாழ்ந்திடுங் கன்னி
[கையே 68

கன்னிகை யுன்னை கரங்குவிக்கின்றேன் கருணை செய்வாய்
சென்னை நகர்னேர் வடக்கொற்றி யூர்வாழ் சிவகாமியே
அன்னை யெவர்க்கும் அரனார் இடம்வாழும் அம்பிகையுன்
தன்னை தொழுவார் துயரை தவிர்க்குந் தயாநிதியே 69

0-,12M491,7 16410
N80

தயாகுணத் தாயே வணக்க மறிவு தகுதிசெல்வம்
சுயாம்பவி தேவி சுதந்தரி கல்விச் சுகுணவதி
மயாமக மாயா பரசிவன் தேவி மதிவதனி
தியானமே நன்ருந் தினமுந் தொழுவேன் திருவடியே 70

திருவடி தரமரைத் தேடித் தொழுவார் திரவியஞ்சேர்
அருள்வடி வம்மை அரனிடச் செல்வி யனுதியதாய்
வருணனை செய்வோர் வளம்பெற வாழ்வார் வடிவழகை
திருவொற்றி யூரினில் வாழும் திருவை தினந்தொழுமே 71

தினந்தொழு கின்றேன் வடிவுடைத் தாயே திருவொற்றியூர்
மனந் தணிந் தேற்றுமுனிவர் மலரடி மன்னினின்று
இனந்தனை ணண்ணி அதிட்டமே இறைவ னென்றறிந்து
தனந் தனியாகி தவம தியற்றுநந் தாய்கழலே 72

தாய் கழல் தஞ்சம்புகுவார் தரணித் தவமுடையோர்
வாய்மதம் பேசார் நெரிதவ ரில்லார் வளரடியார்
பாய்மனஞ் செல்லா சிவசிவா வென்றே தினந்தொழுவார்
ஆய்தமிழ் சேர்திரு ஒற்றியூர் வாழ்ந்திடு அந்தணரே 73

அந்தணர் போற்றும் அரனுர் மனைவி யவனியர்தாய்
வந்தனை செய்வார் வளம்பெற வாழ வகையருள்வாள்
நிந்தனை செய்யில் தனதடியாரை நெற்றி விழியால்
செந்தணல் மாரியாய் வடிவுடை தோன்றி தீய்ந்தமிழே 74

தீய்ந்திடுங் காமமுங் ரோதங்க றெல்லாம் திகழறிவோர்
சாய்தவச் சாலை திருவொற்றி நூரிலே தங்கினின்ருல்
ஆய்த்திடு ஞான அமல நிர்வாணும் அதிட்டமென்றே
ஓய்ந்து னின்ருற் றெல்லை யொன்றுமேஇல்லையே யுலகத்தே

உலகத் தெவர்க்குமே தாய்வடி வான உமைதிருவை
நலபத் திரமலர் கொண்டருச் சிக்கவும் நாம்தொழுதால்
குல முற்றிலுங் குறைவின்றி வாழ்வாரே குபேரனென்ன
நிலநெற் பயிர்சூழ் திருவொற்றி யூரிலே நின்றவர்க்கே 76

நின்ரு ளிருந்தாள் நிலமுழு தானுள் நிலைத்துளங்கும்
மன்ருடு கின்ற பரனிட மாகினுள் மாயையென்றே
அன்ருடந் திருவொற்றி யூர்வந்து போற்றும் அந்தணக்கு
குன்ருத செல்வங் கொழிக்குங் குமரியை கும்பிடவே 77

கும்பிட்ட வர்க்குக் குறைக ளகலும் கொடியிடையை
நம்பிட்ட வர்தொழும் நாரணி பூரணி நாதருடன்
தம்பட் டுடுக்கையும் மத்தளங் கொட்டத் தாரைதப்பட்டை
வெண்பட் டுடுத்தியே விழாவருந் தாயை வேண்டுவனே 78

வேண்டுவன வெல்லா மளிக்கும் விமல வித்தகியை
தாண்டவன் தன்னுடல் தாயகி தற்பரை தார்குழலி
நீண்ட நெடுமாயை நித்திய கல்யாணி நீபெருந்தாய்
காண்டர் கரியநீ திருவொற்றி யூர்வாழ் கன்னிகையே 79

கன்னிகை கார்குழல் காமாட்சி முக்கண் கலைவதித்தாய்
பொன்மணிப் பூஷணி புங்கவி புண்ணியப் பூதலத்தி
தன்னிக ரில்லாத் தலைவி தவப்பெண் தருமநற்ருய்
மின்னிடை பின்சடை வொற்றி யூரன்னை வேதவமுதே 80

வேதவமு தானந்த ஞான வொளியாம் விண்வடிவே
பூதலம் மீதலம் பாதலம் யெங்கும் பொலிந்திலங்கி
சாதனஞ் செய்துத் தாந்தனி அறிவாய் தனித்தநல்லோர்
மாதவஞ் செய்திரு வொற்றியூர் வாழும் வடிவம்மையே 81

வடிவ முடல்வாழ் வளரிள மக்கள் வழங்குமையாள்
குடிகொண் டிருக்குந் திருவொற்றி யூரினில் கூடினற்கு
முடிவிலாச் செல்வமும் முனிவிலாச் சாந்த முத்திபேரும்
படினியில் வாழுயிர்க் கெலாமின் பருள்தேவி பத்திசெய்யே

பத்திசெய் ஞானம் பலிக்கு மென்ருேதும் பழவடியார்
முத்திவந் தெய்தும் மவுன முடைய முனியினத்தோர்
சத்தியென் ருேதும் வடிவுடை தேவியை சார்ந்தவர்க்கு
புத்திர பேறும் புவியிர் புகழும் பொருந்திடுமே 83

பொருந்தி நிலேத்த வடிய ரடியெழு பூதியத்தால்
பெருந்துயர் நீங்கிப் பிறவிப் பிணியறும் பேறுமுண்டாம்
இருந்தவத் தோர்வாழுந் திருவொற்றி யூர்இலகுகின்ற
அருந்தவத் தேவி சிவகாமி யம்மை யடிபணியே 84

அடிபணி வோந்திரு வொற்றி யூரினி லமர்ந்தவரை
வடிவுடை தாயை வழிபட வாழ்த்திவரம் பெருவோம்
நெடிதொடர் பிறவித் துயர் விட்டிட நேர்விழியாளே
துடியிடை தேவி யுருவமா காளி தொழுகுவமே 85

தொழுகுவன் தீவினே போக்கிட வெண்ணித் துணேயடியை
மழுமான் கறத்த னேமன்ரு டிடுவோன் மாசில்மணியை
நழுவா திடம்பெரும் நற்குண நாரணி நான்தினமும்
வழுவா மனதினில் வாழ்த்துவன் வாணுதல் மாணிக்கமே 86

மாணிக்க ரத்தினம் பச்சை மரகத வைரமுமே
ஆணிப் பொன்னம் பலத்தாடும் பிராடிக் கணிகலங்கள்
சேணிற் றவமு மதியணி ஈசனே சேர்திருந்த
வேணித் திருவொற்றி யூரில் விமலியை வேண்டுவனே 87

வேண்டுவன் னின்திருத் தாமரைத் தாளினே வீடுபெற
தாண்டவன் தேவியை தாரணித் தாயை தயாநிதியை
காண்டற் கரிய கருணே வடிவியை கார்குழலே
நீண்டநற் சோலே திருவொற்றி யூரில் நிகழ்பவளே 88

நிகழ்கின்ற சோதித் திருவடித் தன்னில் நின்றுலகமாய்
புகழ்பதி நான்கும் புவனங்க ளெங்கும் பொலிந்திலங்க
அகமு முலகுயிர் பல்லா யிரமாய் அறிவொளியாய்
மகிழ்தவத் தோர்நிறை சாலே யொற்றியூரின் மாதவியே 89

மாதவத் தோரோதுந் திருவொற்றி யூரின் மாமருந்தை
காதலித் தேத்திதங் கை தொழுவார்கள் கருமவினே
பாதலத் தோடிப் பதுங்கிப் பரக்கும் பராபறையாள்
சீதளப் பாத வடிவுடை யம்மையை சேர்ந்தவர்க்கே 90

சேர்ந்திடுஞ் சாது வினங்களை சாந்தஞ் சிரக்கனன்ருய்
சேர்ந்திடுந் தெய்வத் திருவரு ளென்றும் திகழறிவாய்
கூர்ந்தறி வுள்ளோர் குமரியென் ருேதிடுங் கோமகளை
ஆர்ந்தெழு வாரி கரைதிரு வொற்றி அமர்வடிவே 91

அமர்ந்த னன்ஞான அறிவுடன் சாந்த அருளுமையாள்
இமவரை யீன்ற எழில்வடி வம்மை இருநிலத்தில்
குமரனை தந்தி முகத்தனை தந்தாள் குருநமக்கே
இமயவர் வந்து அடிதொழு மொற்றியின் ஈஸ்வரியே 92

ஈஸ்வரி யம்மை எழின்மக மாயை யிலகுகின்ற
ஆஸ்திக ரோது அருஞ்சிவ காமிநீ ஆளுஞ்சத்தி
நாஸ்திக ரென்றும் நவிலு மியர்க்கை நான்கனுபூதி
வாஸ்துவ மாவெளி வாழ்ந்திடம் பெற்ற வடிவழகே 93

வடிவுஞ் செல்வமும் வாழ்வும் வளறவும் வழங்குமையாள்
குடியுங் குணமுங் குடும்பநல் வாழ்க்கை கொடுத்திடுவாள்
அடியவர் தம்மைத் துயருரா வண்ணம் அருளுமையாள்
படியினி லொற்றிப் பதிவளர் தேவிநம் பார்வதியே 94

பார்வதித் தேவி பலநாள் தொழுது பவமகல்வோம்
கார்நிகர் மேனியான் கண்ணன் சகோதரி கன்னிகையை
சீர் பெறப்பாடி நம்தேவி மனேகரி சிறப்புதன்னை
நேர்பெறச் சீராய் சிவத்தி னிணைந்தாள் நிலைத்திடவே 95

நிலமும் புனலும் அனலுநற் காலும் நிலைக்கணுகா
நலமே புரியும் நல்ல வாகாயத்தில் நடனமிட்டாள்
தலமே யடியா தினம் வந்து சேர்ந்துத்தவம்புரிய
குலமான வொற்றி குணமான் சத்தியை கும்பிடுமே 96

கும்பிட்ட பேர்க்கு குறையொன்று மில்லை குவலையத்தில்
வெண்பட்டுடுத்தி விழிகள் மலர்ந்த விமலியை நாம்
கண்பட்ட போது கைகள் சிரசெழக் கவலையறும்
பண்பட்ட சோதி பிரமகல் யாணிநம் பார்வதியே 97

பார்வதி தேவி பராசக்தி காளி பாக்கியவதி
ஓர்வரம் வேண்டி யுடலிற் கலந்தநீ யுச்சிவரை
நேர்பெற நின்றுநி நீராய் மலிந்தாய் நீள்விசும்பெல்லாம்
ஊர், திருவொற்றி நகர்வா ழுகின்ற உமைதிருவே 98

உமைதிரு வென்ற னுடல்வினை போக்கிட உவந்துநின்ருள்
நமையாளுஞ் சத்தி நடனமிடுங் காளி நல்லவர்கு
இமவா னளித்த ஈஸ்வரி தேவிநீ எங்கும்நிறைந்தாய்
தமதன்னை மொற்றித் தற்பரன் தேவித் தனிமான்விழியே 99

மான்போல் விழியாள் மதிமா முகத்தாள் வடிவுடையாள்
தேன் யென்றினிக்குந் தெவிட்டான ஞானத் தெளி
[வுடையாள்
வான்யென்று காக்கும் வளம்பெற வென்றுமே வையகத்தே
தான்தவஞ் செய்து சிவத்திடங் கொண்ட தயாபரியே 100

## வாழ்த்து

வாழ்க வையக மெங்கனும் வாழ்ந்திட
தாழ்விலாத் தமிழ் ரென்றுந் தழைத்திட
ஏழ்கடல் நிறைந் தெங்கணும் வாழ்ந்திட
வாழ்க வொற்றி வடிவுமை வாழ்கவே

★

4A
3-53







## பிரம்மதேவன் கட்டளை

## விஷநோய் நிவாரண மந்திரம்

ஓம் - ஹராம் - இரீம் - ஹ்ரூம் - ராம்-விஷ்ணு சத்தியே நமோ
பகவதி விஷ்ணு சத்தி-ஏ - ஹே-ஈ - ஏஞம்-ஹர - ஹர-ஹந-
ஹந-பச-பச-மத-மத -உச்சாதியோ - உச்சாதையா - தூரே-
குடுகுடு - சுவாஹா - குறுகுறு - சுவாஹா - விடுசிகே-
இமோந்தம் - கெச்சா - ஜீவ-ஜீவ-சந்திரமண்டலம்-கதோசி
சுவாஹா.

GEM PRESS, Madras-1.